முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2023 சனவரி

## (104) வணிகச் சூழல்

(Business Environment)

2023-03-05
பிற்பகல்
[02.00 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

(1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றுள் வணிகமொன்றின் உள்ளக நாட்டதாரர் (stakeholder) யார்?

(1) சமூகம். (2) கடன்கொடுத்தோர் (3) போட்டியாளர்கள் (4) உரிமையாளர்கள்

**1.2** கீழ்வருவனவற்றுள் முறைசார் அமைப்பொன்றிற்கான உதாரணமாக **அமையாதது** எது?

(1) கல்வி அமைச்சு (2) கூகிள் பீ.எல்.சீ.

(3) முகநூல் அரட்டைக் குழு (4) கொழும்புப் பல்கலைக்கழகம்

**1.3** கீழ்வரும் தொகுதிகளில் மனிதத் தேவைகளை (human needs) மாத்திரம் கொண்டுள்ள தொகுதி எது?

(1) உறைவிடம், உணவு, உடைகள் (2) பாண், உணவு, பாதுகாப்பு

(3) பாண், வீடுகள், மேற்சட்டைகள் (4) உறைவிடம், மேற்சட்டைகள், மின்சாரம்

**1.4** கீழ்வருவனவற்றில் முறைசார் வணிகமொன்றின் ஒரு பண்பாக (characteristic) அமைவது எது?

(1) இது தொடர்ச்சியான செயன்முறையொன்றைக் கொண்டிருக்கிறது.

(2) நிச்சயமற்ற தன்மை காணப்படுவதில்லை.

(3) இது பொருளாதாரச் செயற்பாடுகளைக் கொண்டிருப்பதில்லை.

(4) இது இலாபத்தினால் தூண்டப்படுவதில்லை.

**1.5** காசு பயன்படுத்துவதை விட காசோலைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் ஓர் அனுகூலமாக அமைவது எது?

(1) செய்யப்பட்ட கொடுப்பனவை நிரூபிப்பது இலகுவானது.

(2) கொடுப்பனவைச் செய்வதற்குப் பாதுகாப்பானது.

(3) பிற்தேதியொன்றைக் குறிப்பிடுவதற்கு இயலுமாக இருத்தல்.

(4) மேற்கூறிய யாவும்.

**1.6** கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்புடைய கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** இது இலங்கையின் அதிகாரபூர்வ வெளிநாட்டு ஒதுக்கங்களை முகாமை செய்கிறது.

**(b)** இது மூலதனச் சந்தைகளில் தொழிற்படுத்தப்பட்டுள்ள நிறுவனம்சார்ந்த மற்றும் தனிப்பட்ட முதலீட்டாளர்களுக்கான ஒழுங்குபடுத்தப்பட்ட சூழலை வழங்குகிறது.

**(c)** இது தமது பங்குகளை காசாக மாற்றிக் கொள்வதற்கு முதலீட்டாளர்களுக்கு உதவுகிறது.

மேலுள்ளவற்றில், கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் தொடர்பான சரியான கூற்று/கூற்றுக்கள்:

(1) **(b)** மாத்திரம். (2) **(c)** மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.7** கீழ்வருவனவற்றில், இலங்கை மத்திய வங்கியால் மேற்பார்வை **செய்யப்படாத** அமைப்பு எது?

(1) அரச வங்கிகள் (2) அலகு நம்பிக்கைகள்.

(3) உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள். (4) பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்.

**1.8** கீழ்வருவனவற்றில் மொத்த விற்பனை வணிகத்தின் ஓர் அம்சமாக (feature) இருப்பது எது?

(1) குறிப்பிடத்தக்களவான கடன் பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது.

(2) வாங்குபவர்களின் நோக்கம் சொந்த நுகர்வாகும்.

(3) சில்லறை விற்பனையாளர்களும் நுகர்வோரும் இதில் ஈடுபடும் தரப்பினராவர்.

(4) பரிவர்த்தனைகள் எப்பொழுதும் காசு அல்லது காசுச் சமானங்களால் நிறைவு செய்யப் படுகின்றன.

**1.9** கீழ்வரும் பண்புகளைக் கவனத்திற் கொள்க :

**(a)** நோக்கு (Vision).

**(b)** படைப்பாற்றல் (Creativity).

**(c)** தன்னம்பிக்கை (Self-confidence).

மேலுள்ளவற்றில், தொழில் முயற்சியாளர் ஒருவரின் பண்பாக (characteristics) அமைவது :

(1) **(a)** மாத்திரம்.
(2) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும்.

**1.10** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க :

**(a)** நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான பங்களிப்பு.

**(b)** தொடர்ச்சியின்மை.

**(c)** வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

**(d)** வறுமையை ஒழிக்க உதவுதல்.

மேலுள்ளவற்றில், SME களின் முக்கியத்துவம் எதில் வழங்கப்பட்டுள்ளது?

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.
(2) **(a)** யும் **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.
(3) **(a)** யும் **(c)** யும் **(d)** யும் மாத்திரம்.
(4) மேற்கூறிய யாவும்.

*கீழே இல **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உங்களது விடைகளை (சரியானது / தவறானது) தரப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுதவும்..*

**1.11** காசோலை என்பது இலத்திரனியல் பணத்திற்கான ஓர் உதாரணமாகும்.

**1.12** நாணயக் கடிதம் என்பது சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஒரு கொடுப்பனவு முறை ஆகும்.

**1.13** மூலதனச் சந்தை என்பது குறுங்கால நிதிக்கான ஒரு சந்தையாகும்.

**1.14** கைமாற்றும் பெறுநரின் (transferee) பெயர் புறக்குறிப்பாக மாத்திரம் பயன்படுத்தப்பட்டால், அது ஒரு வெற்றுப் புறக்குறிப்பு (blank endorsement) ஆகும்.

**1.15** இழப்பீட்டுக் கோட்பாடு (Indemnity principle) ஆயுள் காப்புறுதிக்கு மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.16** நிறுவனமொன்றின் நோக்கு (Vision) மற்றும் பணி (Mission) ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.17** இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனங்களின் (SMEs) செயலாற்றுகையை மேம்படுத்தும் இரண்டு (02) வழிமுறைகளைக் குறிப்பிடுக.

**1.18** போட்டரின் ஐந்து படைகள் பகுப்பாய்வில் காணப்படும் இரண்டு (02) படைகளைக் (forces) குறிப்பிடுக.

**1.19** உள்ளக - தொழில்முயற்சியாண்மை (Intra-Entrepreneurship) என்பதன் கருத்தைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.20** நிறுவன சமூகப் பொறுப்புடமை (CSR) என்னும் பதம் கருதுவது யாதெனச் சுருக்கமாக விபரிக்குக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**ஆன்** என்பவர் தனியார் கல்வி நிறுவகமொன்றில் வணிகக் கல்விப் பாடநெறியொன்றைப் பின்பற்றுகிறார். அவரது பாடநெறியின் ஓர் அங்கமாக, இலங்கையின் கம்பனிச் சட்டம் மற்றும் இலங்கையிலுள்ள வணிகங்களுக்கு அதன் பொருத்தப்பாட்டுத்தன்மை என்பன பற்றி முன்வைப்பு (presentation) ஒன்றினைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. **ஆன்,** கீழ்வரும் வினாக்களுக்கான பதில்களை அறிந்து கொள்வதற்கு உங்களுடைய உதவியை எதிர்பார்க்கிறார் :

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) கூட்டிணைப்புச் சான்றிதழில் உள்ளடக்கப்படும் மூன்று (03) தகவல்களை **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(b) ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு வரையறுக்கப்பட்ட பொதுக் கம்பனி ஒன்றினால் ஏற்படக்கூடிய நான்கு (04) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) இலங்கையின் கம்பனிகள் சட்டத்தின்படி, ஒரு கம்பனியின் பெயரை எவ்வாறு பயன்படுத்தலாமென **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

**எக்ஸ்பிரஸ்வே** என்பது அதிவேக நெடுஞ்சாலையில் பயணிக்கின்ற ஒரு தொகுதிப் பேருந்துகள், பயணிகள் வேன்கள், ஆடம்பரக் கார்கள் மற்றும் லொறிகளை வாடகைக்கு விடும் ஒரு போக்குவரத்துச் சேவை வழங்குநர் ஆகும். **எக்ஸ்பிரஸ்வே** இன் உரிமையாளரும் முகாமையாளருமாக இருப்பவர் **நெவில்** என்பவராவார். அவர் இந்த வாகனங்களின் காப்புறுதிக்காக ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிடத்தக்களவு பணத்தைச் செலவிடுகிறார். எவ்வாறாயினும், பொதுப் போக்குவரத்து இடருடன் ஒப்பிடுகையில் அவர் செலவிடும் தொகை புறக்கணிக்கத்தக்கது என அவர் நம்புகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **நெவில்** தனது வாகனத் தொகுதியைக் காப்புறுதி செய்யக்கூடிய காப்புறுதி வகையை **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) வணிக நிறுவனமொன்றிற்கு காப்புறுதி ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) பயனுறுதிமிக்க போக்குவரத்து முறைமையொன்று இல்லாததன் காரணமாக ஒரு நிறுவனம் எதிர்நோக்கக்கூடிய நான்கு (04) சிரமங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**E-way** என்பது இலத்திரனியல் மோட்டார் சைக்கிள்களை சில்லறையாக விற்பனை செய்யும் வணிகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு மலேசியன் கம்பனி ஆகும். அவர்கள் தங்களுடைய பொருள் பற்றி அவர்களது இணையத்தளமான "www.eway.com" இல் விளம்பரம் செய்கின்றனர். சாத்தியமான வாடிக்கையாளர்கள் அவர்களுடைய இணையத்தளத்தைப் பார்வையிட்டு, மோட்டார் சைக்கிளின் விலையில் 50% இனைச் செலுத்தி மோட்டார் சைக்கிளுக்கான கட்டளையைச் (ஓடர்) செய்யலாம். அவர்களுடைய முகவர்கள் பல ஆசிய நாடுகளிலும் இருக்கின்றனர். வாடிக்கையாளர்களால் கட்டளை செய்யப்பட்ட பின்னர், **E-way** ஆனது உரிய முகவர் ஊடாக மோட்டார் சைக்கிள்களை ஏற்றுமதி செய்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **E-way** ஈடுபட்டுள்ள இலத்திரனியல் வணிகத்தின் வகையை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) நுகர்வோருக்கு இலத்திரனியல் வணிகத்தின் இரண்டு (02) அனுகூலங்களையும் இரண்டு (02) பிரதிகூலங்களையும் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) இலங்கையில் வணிகங்களுக்கு வசதியளிக்கின்ற இரண்டு (02) அரச நிறுவனங்களை **அடையாளங் கண்டு**, அவற்றின் உரிய வகிபாகங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**தரிந்து** என்பவர் அண்மையில் தாய்லாந்து அரச பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்துள்ளார். அவர் ஒரு இளமாணிப் பட்டதாரியாக தாய்லாந்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்துள்ளதுடன் தேங்காய்களை ஓர் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்வதற்கு நீர்வழிச் சாலைகள் (waterways) எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பார்வையிட்டு வந்துள்ளார். தென்னந்தோட்டமொன்றின் வாரிசான **தரிந்து**, தேங்காய்களை தோட்டங்களிலிருந்து தேங்காய் ஆலைகளுக்கும் தேங்காயை மூலப்பொருளாகப் பயன்படுத்தும் ஏனைய தொழிற்சாலைகளுக்கும் கொண்டு செல்வதற்காக இலங்கையால் நீர்வழிச் சாலைகளை அமைக்க முடியுமா என்பதையிட்டு ஆச்சரியம் அடைந்துள்ளார். தற்போது, **தரிந்து** தொழில் முயற்சியாளர் ஒருவராக ஏற்றுமதிச் சந்தையை இலக்காகக் கொண்டு புதிய வணிகமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிடுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு போக்குவரத்து முறைமை என்ற வகையில் ஒரு சிறந்த நீர்வழிப் போக்குவரத்து முறைமையின் மூன்று (03) தன்மைகளை (qualities) **அடையாளம் காண்க.** (03 புள்ளிகள்)

(b) ஏற்றுமதியாளர் ஒருவருக்கு இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்று வழங்குகின்ற மூன்று (03) சேவைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) தொழில் முயற்சியாண்மை மற்றும் வணிகம் ஆகியவற்றிற்கிடையிலான தொடர்பை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 06

**C Soft** என்பது வெயாங்கொடை ஓயாவினால் சூழப்பட்ட பிரதேசத்தில் வெயாங்கொடையில் உள்ள 13 ஏக்கர் காணியில் அமைந்துள்ள மென் பானங்கள் தயாரிப்பு நிறுவனமாகும். அவர்கள் மொணராகலை, கம்பஹா, அநுராதபுரம் மற்றும் வெள்ளவாயா உள்ளிட்ட நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களிலிருந்தும் பழங்களை வாங்குகின்றனர். **C Soft** ஆனது மேற்படி பிரதேசங்களிலுள்ள சிறிய அளவு வணிக விவசாயிகளுடன் சிறந்த உறவினைக் கொண்டிருக்கிறது. **C Soft** ஆனது குறித்த வாரமொன்றில் தேவைப்படும் வெவ்வேறு வகையான பழங்களையும் சுட்டிக் காட்டுவதற்காக கணினிச் செயலி (computer application) ஒன்றை உருவாக்கியிருக்கிறது. **C Soft** உடன் பதிவு செய்துள்ள சிறிய அளவு வணிக விவசாயிகள் தங்களது கையடக்கத் தொலைபேசி ஊடாக இந்த முறைமையை அணுக முடியும். அவர்கள் தங்களிடமுள்ள பழங்கள் தொடர்பில் முறைமையில் பதிவு செய்கின்றனர் (update). அந்தந்த விவசாயிகளிடமிருந்து பழங்களை வாங்குவதற்கான கட்டளைகள் (ஓடர்கள்) முறைமையால் தன்னியக்கமாகவே மேற்கொள்ளப்பட்டு, வாங்கப்படும் பழங்கள் வெயாங்கொடை ஆலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றன.

ஆண்டின் காலப்பகுதியில், கழிவு நீரானது பரிகரிப்பின்றி உற்பத்தி ஆலையினால் கொட்டப்படுவதாக கிராமத்தில் வதந்தி பரவியதன் காரணமாக நிறுவனம் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருந்தது. இந்த கழிவு நீர் காரணமாக தமது வீட்டுக் கிணறுகள் உள்ளிட்ட தங்களது நீர் வளங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன என கிராமவாசிகள் சந்தேகிக்கின்றனர். ஒரு தடவை சுற்றுச்சூழல் மாசடைவதாகக் குற்றஞ்சாட்டி **C Soft** இன் பிரதான வாயிலுக்கு முன்னால் எதிர்ப்புப் போராட்டமொன்றை கிராமவாசிகளின் குழுவொன்று ஏற்பாடு செய்திருந்தது. இந்தப் போராட்டம் பிரதேசத்தின் பொலிசாரின் தலையீட்டினால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அந்த வாரத்தில், இந்தச் சம்பவம் தொடர்பில் தேசிய நாளிதழ் ஒன்று கட்டுரை ஒன்றைப் பிரசுரித்திருந்தது. மேலும், **C Soft** நிறுவனத்தினால் அவர்களுடைய சில உற்பத்திப் பொருள்களுக்கு செயற்கைச் சுவையூட்டிகளும் நிறங்களும் பயன்படுத்தப்படுகின்றன என்பதை அந்த நாளிதழ் சுட்டிக் காட்டியிருந்தது. பின்னர், **C Soft** நிறுவனத்தின் பணிப்பாளர்கள் சபையானது சம்பந்தப்பட்ட சுற்றுச்சூழல் சான்றிதழ்கள், SLS மற்றும் ISO சான்றிதழ்கள், கழிவு நீர் பரிகரிப்பு ஆலையை நிறுவுதல் ஆகியவற்றில் தாங்கள் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தது. மேலும், கிராம மக்களின் பிரதிநிதிகளை தொழிற்சாலைக்கு வருகை தந்து, அந்த முயற்சிகளை நேரில் பார்வையிடவும் வதந்திகளை விட உண்மையான நிலைவரத்தை அறிந்து கொள்ளவும் அழைப்பு விடுத்திருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **C Soft** ஆனது தமது வணிகத்தை நெறிமுறையாக நடத்துவதில் கவனத்தில் கொள்ள வேண்டிய மூன்று (03) காரணிகளை **அடையாளம் காண்க.** (03 புள்ளிகள்)

(b) **C Soft** தனது வணிகத்திற்கு புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படும் மூன்று (03) அனுகூலங்களை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(c) சுற்றுச்சூழல் மாசடைவதைத் தடுப்பதற்கு **C Soft** எடுக்கக்கூடிய நான்கு (04) நடவடிக்கைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) மேற்படி விவரணத்தின்படி, **C Soft** தற்போது கொண்டுள்ள மூன்று (03) பொருளாதார வளங்களை (economic resources) **அடையாளங் காண்க.** (03 புள்ளிகள்)

(e) சமூகமானது **C Soft** இன் ஒரு முக்கியமான நாட்டதாரராக (stakeholder) ஏன் கருதப்படுகிறது என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |